
அதிசயத்தீவில்
ஆர்ச்சி!
லயன்
காமிக்ஸ்
ARCHIE
ரூ-3/-



லயன் காமிக்ஸின்
ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில்
ஜூலை 1.ல் வருகிறது
ஆண்டு மலர்!


அதிசயத்... தீவில்... ஆர்ச்சி!
ஆர்ச்சி, விக்டர், தாம்சன் குழுவினரை சுமந்துகொண்டு அவர்களுடைய கால இயந்திரம் 'கோட்டை' காலத்தையும், தூரத்தையும் அசுர கதியில் கடந்து வந்துகொண்டிருந்தது. எதிர்காலத்தினுள் ஆழமாக ஊடுருவிச் சென்று அங்கே எதிர்பாராத பல பயங்கரங்களை சந்தித்து, மிரட்சியடைந்து போயிருந்த விக்டரும், தாம்சனும் சீக்கிரமாக 20ம் நூற்றாண்டுக்கு பத்திரமாக திரும்பிவந்து சேரவேண்டும் என்ற துடிதுடிப்போடு இருந்தார்கள்-
இதோ - தரையிறங்கப் போகிறோம் -தோழர்கள் தயாராகவும்!
இந்தக்கணத்தை எதிர்பார்த்துத்தானே நாங்கள் ஆவலோடு இருந்தோம்!
இது எந்த இடம்-தெரிகிறதா?
மறு நிமிடம் 'கோட்டை' பத்திரமாக தரையிறங்கியது-
பயணம் நல்லபடியாக முடிந்தது
ARCHIE
ஆமாம்- இப்போது தான் நிம்மதியாக மூச்சுவிட முடிகிறது!
சரியாக 1991க்கு வந்து சேர்ந்திருப்போம் என்று நம்புவோமாக!


ஊய்ய்ய்-! பிரமாதம்! ராட்சஸ மரம் ஒன்றின் மீது கோட்டை இறங்கி நிற்கிறது என்பதை தவிர மற்றபடி எல்லாமே நார்மலாக தென்படுகிறது விக்டர்-
கிண்டலா? பழங்கால வனுந்தரம் மாதிரி காட்சியளிக்கிறது! குரங்குகளும், மான்களும், பறவை இனங்களும் தென்படுகின்றன-
அப்பாடி! இனிமேல் அந்த ரக சைத்தா ளோடு சண்டை போட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை!
குதூகலமடைந்த தோழர்கள் ஆர்ச்சியின் உதவியால் மரத்திலிருந்து கீழே இறங்கினர்-
நல்லபடியாக பயணத்தை முடிவுக்கு கொண்டு வந்த உனக்கு நன்றி ஆர்ச்சி-
தாம்சன் சொல்லி முடிக்குமுன்-
சிங்கங்கள்! ஐயோ!
கர் கர்ர்-
எங்கள் மீது பாய யத்தனிக்கின்றன-ஏதாவது செய் ஆர்ச்சி!
மரத்தை பிடுங்கி எடுத்து ஆர்ச்சி-
என்னமாய் கர்ஜிக்கின்றன!
OR FASTER!


மறு வினாடி-
ஆர்ச்சி இருக்கிற இடத்திலே ஆர்ப்பாட்டம் பண்ண நினைக்கலாமா-ஓடிப்போயிடுங்க!
ஒரே அடியில் அம்பேல்!
ஆயுளுக்கும் மறக்காது!
பேய், பிசாசை நேரில் கண்டுவிட்ட மாதிரி என்னமாய் ஓடுகின்றன-பார்!
பொதுவாக சிங்கங்களும் கூட மனிதர்களைக் கண்டு விலகிப் போவதுதான் வழக்கம்- இவைகள் நம்மை தாக்க முனைந்தது சற்று வித்தியாசமாகப் படுகிறது.
தீவிர சிந்தனையோடு அவ்விடத்தை ஆராயத் தொடங்கினார்கள்-
நாம் எண்ணிக்கொண்டிருக்கிற மாதிரி நார்மலான சூழ-லில் நாம் இல்லையோ என்ற சந்தேகம்வரவரவலுக்கிறது எனக்கு!
அங்கே பார்· ஒரு ரோபோ! துருஏறி, புல் மண்டிக்கிடக் கிறது!
அடுத்து ஓர் ஆற்றைக் கண்டார்கள்-
மரத்தை வெட்டி கட்டு மரம் தயார் பண்ணி ஆற்றுவழி பயணம் செய்தால் நிறைய உண்மைகளை தெரிந்து கொள்ளலாம்!
நல்ல யோசனை! ஆற்றோரமாக ஏதாவது ஒரு குடியிருப்பு அல்லது நகரம் தென்படலாம்!



இது அவ்வளவு புத்திசாலித் தனமான காரியமாகப்பட வில்லை எனக்கு-நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?
அதை தெரிந்து கொள்ளத் தானே இந்த கட்டுமரப் பயணம்!
விக்டரின் மனச் சஞ்சலம் வலுப்பெற்று வந்தது-
அதோ-, ஒரு கட்டிடம்
ஆனால்- பாழடைந்து கிடக்கிறது! மனித நடமாட்டத்தையே காணோம்! ஊஹூம்- சரியாகப்படவில்லை!
அருகில் சென்று பார்ப்போம்!
அப்போது திடீரென்று-
ஹே- என்ன இது?
ஒருவகை ஒளிவீச்சு! அதீதமான பிரகாசம்- கண் கூசுகிறது!
உபயோகமற்றுக் கிடந்த படகை குறி வைத்து பாய்ந்து இறங்கியது அந்த ஒளி வீச்சு!
அந்தப் படகை தொட்டதும் மங்கிவிட்டது பார்!
ஆர்ச்சி-வேலை வந்து விட்டது! களத்தில் இறங்க தயாராக இரு!
நங்கூர கேபிள்கள் இற்றுப்போன நூல்போல் அறுந்து கொள்ள-
ஹே-ஜாக்கிரதை! அந்தப் படகு நம்மை நோக்கி சீறிக் கொண்டு புறப்பட்டு விட்டது பார்-
வந்து மோதியதோ கட்டு மரம் தூள்தூளாகிப் போவது நிச்சயம்!


ஐயோ - அசுர வேகத்தில் வருகிறது!
தொலைந்தோம்!
விர்ர்ர்ர்!


ஆர்ச்சி நைச்சியமாக படகை விலக்கி ஓட்டியது-
நல்ல வேளை-குறி தப்பி விட்டது!
அந்த பேய்ப் படகை செலுத்தும் சக்தி எது என்றே புரிந்து கொள்ள முடிய வில்லை-
இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்- இன்னும் ஆபத்து விலகிவிடவில்லை!


-ஏதோ ஒரு சமிக்ஞையின் தூண்டுதலால் செயல்படுவதுபோல்- முதலைகள் தலைதூக்கின-
படகு நம்மீது மோதுவதை எதிர்பார்த்து நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு காத்திருப்பதுபோல் தோன்றுகிறது-
ஆர்ச்சி-கவனி-அந்தப் படகு திரும்பி வருகிறது பார் நம்மை நோக்கி!
விர்ர்ர்ர்ர்ர்!



இம்முறையும் ஆர்ச்சியின் அசாத்திய செயல் வேகம் தான் அவர்களை காப்பாற்றியது-
மறுபடியும் விலகி தப்பித்துக் கொண்டு விட்டோம்! கட்டு மரத்தின் ஓரத்து கட்டைகளை வெட்டி எடுங்கள்- சீக்கிரம்!
வாட்? உனக்கென்ன பைத்தியமா? ஆனால் ஓ.கே!
அந்த பேய்ப் படகு மூன்றாவது முறையாக அவர்களை நோக்கி பாய்ந்து முன்னேறி வந்தபோது-
ஓ-நோ-இம்முறை நேருக்கு நேர் மோதிக் கொள்ளப் போகிறோம்-தொலைந்தோம்! இந்தா டு!
நீரினுள் விழுந்தோமோ, மறுகணமே நாங்கள் முதலைகளுக்கு விருந்தாகிப் போய்விடுவோம்- ஆர்ச்சி!
ஆனால் ஆர்ச்சியிடம் வேறொரு திட்டம் இருந்தது-
கொன்னு ட்டேன்!
பலே-பலே-! ஒழிந்தது பேய்ப் படகு!
ஆனால்-முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு நெருங்கி வருகின்றன பார்!
அவைகளுக்கும் உடனடியாக ஒரு வழி பண்ணு ஆர்ச்சி!


நீர்யானைகளால் ஆர்ச்சியின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை-
மயிரிழையில் தப்பி விட்டோம்!
ஓடிவா-
ஓடுங்கள்-இந்த சைத்தான்களை ஆர்ச்சி கவனித்துக் கொள்ளும்!
கட்டு மரத்தை தூக்கி நிறுத்தியது ஆர்ச்சி-
ஒழிந்து போங்கள்!
நாம் ஓடிப் போய்விடலாம்!
மடேர்! மடேர்!
மடேர்
ஓடு-! ஓடு-!
சில வினாடிகளுக்குப் பின்-
திரும்பியே பார்க்கக் கூடாது-ஓடுங்க!
இவைகளை தூண்டி விட்டதே அந்த ஒளிவீச்சு தான்!
அந்த ஒளிவீச்சின் பின்னால் ஏதோ மர்மம் இருக்கிறது!
'கோட்டை'க்கு திரும்பி போய்விடுவோம் க்ருள் கிரகத்தினரிடம் நாம் பட்டபாட்டை அதற்குள் மறந்துவிட்டாயா? அவர்களை மறுபடியும் எதிர்கொள்ள ஆசையா என்ன?
இல்லை-இங்கே தங்கி விஷயம் என்னவென்று ஆராய்வோம்!
ஆர்ச்சி சொல்வது தான் சரி-இங்கே யாருக்கேனும் உதவி தேவைபடும்பட்சத்தில் நாம் ஓடிப்போவது சரியாகாது!
சற்று பதைபதைப்போடு அக்கம் பக்கத்தை ஆராயத் தொடங்கினார்கள்-
அவசரத்தில் போட்டது போட்டபடி எல்லோரும் ஓடிப்போயிருக்கிறார்கள்-
இங்கே வந்து பாருங்கள்-நான் என்ன கண்டுபிடித்திருக்கிறேன் என்று!


அது ஓர் அற்புதமான காட்சி-
சூரிய சக்தியில் இயங்கும் ரயில்! சொல்வது ஆர்ச்சி என்பதால் நம்பலாம்!
ஆக நாம் இன்னமும் எதிர் காலத்தில்தான் இருக்கிறோம் என்றாகிறது! இந்த ரயில் பாதை எங்கே போகிறதோ?
விக்டர் நீயும் ஏறிக் கொள்-சீக்கிரம்!
போய்த்தான் பார்ப்போமே-ஏறிக் கொள்ளுங்கள்!
அந்த மர்ம ஒளியைப் பற்றி தெரிந்துகொள்ள இந்தப் பயணம் உதவக் கூடும்!
அங்கே எதிரே ஒரு நகரம் தென்படுகிறது பார்-1991 ன் தூரத்தில்!
1993, 94ல் நாம் இருக்கிறோம் என்று நினைக்கிறேன். அந்த நகரில் ஜனங்களை சந்திக்க முடியும் என்று நம்புகிறேன்!
முடிவில்-
அடக் கடவுளே மனித நடமாட்டத்தையே காணோமே!
உடனே திரும்பி போய் விடுவதுதான் புத்திசாலித்தனம் என்று தோன்றுகிறது!
ஆர்ச்சி அப்படி நினைக்கவில்லை!
FE-RES
WATANC



நம்மை யாரோ கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது போல் உறுத்துகிறது விக்டர்!
புரிகிறது தாம்சன்! ஆர்ச்சி எங்கள அருகிலேயே இரு-எபபோதும்!
தாமசன்னை கணிப்பு சரியே. ஒரு வீடியோ திரையின் முன்னே அமர்ந்திருந்த விநோத உருவங்களை பார்த்த மாத்திரத்தில் தோழர்கள் அடையாளம் தெரிந்துகொள்ளக்கூடும்-வெளி கிரகத்திலிருந்து பூமியை ஆக்கிர-மிக்க வந்திருந்த க்ருள் குழுவினர் தான் அவர்கள்-
இரு மானிடர்களும் ஒரு அங்கிய ரோபோவும்! நம் ஒளிவீச்சுக்கு தப்பிவிட்டார்கள் போலும்!
ஆனால் இந்தத் தடவை அவர்கள் தப்பித்துக் கொள்ளவே முடியாது!
ஹே - மர்ம ஒளிவீச்சு-அதோ-மறுபடியும் வந்துவிட்டது! என்ன நடக்கப்போகிறதோ தெரியவில்லை. ஆனால் நம்மை பொறுத்தவரை இது பேராபத்துக்கு அறிகுறி என்பதில் சந்தேகமேயில்லை.



பிசாசு வெளிச்சம் அந்தக் காரை நோக்கிப் பாய்கிறது -ஆபத்து- ஓடுங்கள்!
இங்கே நாம் வந்திருக்கவே கூடாது-எல்லாம் உன்னால் வந்த வினை!
பழிகூற நேரம் இதுவல்ல-பிடி ஓட்டம்!



ஒளி வெள்ளம் கார்களின் மீது படிந்ததும் அவற்றின் எஞ்சின் உறுமத் தொடங்கியது-
விபரீதம்! அவற்றில் டிரைவா யாரும் இல்லே-தாமாகவே கிளம்பி விட்டன!
பதுங்க ப்க்கத்தி லேயே இடம் தேடு!
நாலா திசைகளிலிருந்தும் ஆளில்லா கார்கள் ஆவேசமாக விரட்டிவந்தன
எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டோம்- சாலே இங்கே முடிகிறது.
எதிரே சுவர்தான் இருக்கிறது- தொலேந்தோம்!
கிறீறிறீச்!
க்றிறீச்ச..!
பக்கத்து கட்டிடத்தினுள்-
நம் வீரிய ஒளிவீச்சு இம்முறை வெற்றி ஈட்டப் போகிறது! அந்த ரோபோவையும், அதன் தோழர்களேயும் அந்தக் கார்கள் நசுக்கி கூழாக்கப் போகின்றன!
தப்பிக்க வழியே கிடையாது, அவர்களுக்கு!
சட்டென்று ஆர்ச்சியின் டெலஸ்கோபிக் கரங்கள் நீண்டன-
நன்றி ஆர்ச்சி!
ஏறி மேலே போய்விடுங்கள்!
சீக்கிரம்-!
சுழன்று திரும்பியது ஆர்ச்சி-
கார்களே-ஒவ்வொருத்தராக வாருங்கள்- ஒற்றைக்கு ஒற்றை பார்த்து விடலாம்!
விடாதே- நொறுக்கித் தள்ளு!


அதைத் ...டர்ந்து-
பிசாசு வெளிச்சத்தோட் சேஷ்டை எல்லாம் அசகாய சூரன் ஆர்ச்சியிடம் செல்லுபடியாகாது!
க்ராக்
டமார்
ஒரே வீச்சில் அத்தனை கார்களையும் அம்பேலாக்கி விட்ட ஆர்ச்சியின் சாமர்த்தியமே சாமர்த்தியம்!
ஆனால் ஆபத்து அத்தோடு ஓய்ந்து போய்விடவில்லை-
அதன் பிடியில் அகப்பட்டால் நேரே பரலோகம் தான்!
ஹே- ஆர்ச்சி- அங்கே கவனி! இயந்திர இடுக்கி நம்மை நோக்கி வருகிறது!
ஆ-ர்-ச்-சி- காப்பாற்று!
எங்களை கவ்வ முற்படுகிறது- ஐயோ!
சட்டென்று பாய்ந்து பற்றியது ஆர்ச்சி-
வா- தாம்சன்- இங்கிருந்துபோய் விடலாம்!
எங்கே போவது? போகிற இடமெல்லாம் ஆபத்து நம்மை தேடி வருகிறதே!
கிறீச்!
ஏய்- உன்னைவிட ஆர்ச்சிதான் பலசாலி- ஒத்துக்கொள்கிறாயா?


நடப்பதை நேரில் கண்டறிய வெளியே தலை காட்டின விநோத ஜந்துக்கள்-
அங்கே பார்-விக்டர்! அவை-க்ருள் ஜந்துக்கள் தானே? அவற்றை நாம் முறியடித்து விட்டதாக அல்லவோ எண்ணிக் கொண்டிருக்கிறோம்-அவை இங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றன?
பிசாசு ஒளி வீச்சுக்கு இந்த துஷ்டர்கள் தான் காரணம் என்பதில் சந்தேகமேயில்லை!
இயந்திர கவ்வியை அலாக்காக தூக்கி சுழற்றிஎறிந்தது ஆர்ச்சி-
அந்த க்ருள் ஜந்துக்களை முடிந்தால் ஒழித்துக் கட்டப் பார்-ஆர்ச்சி!
மறுபடியும் க்ருள்களோடு மோத நான் தயாரில்லை-'கோட்டை'யைத் தேடி ஒரே ஓட்டமாக ஓடப் போகிறேன!
க்ருள்களின் மீது போய் விழுந்தது ஆர்ச்சி எறிந்த வாகனம்-
கச்சிதமாக அடித்து விட்டது ஆர்ச்சி-
இந்த கார்களில் ஒன்றை எடுத்துக் கொள்வோம்! சூரிய வெப்பத் திறனில் இயங்கக் கூடியவை இவை!
ஆ-ஆ-ஆ-ஆ-
காரை நான் ஓட்டுகிறேன்-'கோட்டை'யை நோக்கி போவதை உறுதிசெய்து கொள்ள!
நம்மை ஒழிதத்துக்கட்டியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறார்கள் அயல்கிரகவாசிகள்-கணமும் இங்கே தாமதிக்கலாகாது-
எந்த வருடத்தில் இருக்கிறோம் என்று தெரிந்தால் தேவலை! இந்த சைத்தான்கள் பூமியை மடக்குவதில் குறியாக உள்ளனர்!
ஆயாயா-ஹீ ஈ-ஈ-ஈ!
உச்சவேகத்தில் விடு-தாம்சன்!
இதுவே ஜெட் விமானமாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!


ஆனுல் ஆர்ச்சி வேறுவிதமாக திட்டமிட்டிருந்தது-
விலகு - இனிமேல் ஆர்ச்சி ஓட்டப் போகிறது!
சண்டாளா - இது என்ன வம்பு?


க்ருள்ஸின் கண்ட்ரோல் காம்ப்ளெக்ஸில்-
எமர்ஜென்ஸி ரெட்-எமர்ஜென்ஸி ரெட்-எல்லா சாலைகளையும் மூடவும்! அந்நிய ரோபோவும் அதன் இரு சகாக்களும் தப்பிவிடலாகாது-வளைத்து, முடிந்தால் ஒழித்துக்கட்ட வேண்டும்!


வலுக்கட்டாயமாக 'ஸ்டியரிங்'கை கைப்பற்றிக் கொண்டுவிட்டது ஆர்ச்சி-
இங்கே சுற்றிக் கொண் டிருந்தால் க்ருள்ஸ் நம்மை தீர்த்துக் கட்டி விடுவது உறுதி!
மண்டையிலே மசாலா இல்லாத மடையனே-நேராக ஆபத்தை நோக்கி அல்லவா ஓட்டிப் போகிறாய்?
'கோட்டை'யை நோக்கி இப்போது செல்வது பாதுகாப்பானதல்ல!


துஷ்டர்கள் இவர்களுடைய பாதையை குறிவைத்து மர்ம ஒளியை பாய்ச்சினார்கள்.
எதிரே தெரியும் சுற்று வேலியை குறிவை!
இம்முறை வகையாக மாட்டிக் கொண்டு வி__ார்கள்!
உஷ்...ஷ்...ஷ்...ஷ்
மர்ம ஒளி வீச்சு வேலியை தொட்டது.
அந்த வேலி உயிர்ப் பெற்று நம்மை அழிக்க கிளம்புகிறது. ஜாக்கிரதை!
திருப்பு. ஆர்ச்சி. காரை திருப்பு!


மேலெழும்பி, அவர்களை இலக்கு வைத்து கீழ் நோக்கி குவிந்தது வேலி-
அம்மாடி-மயிரிழையில் விலகி விட்டோம்!
ஆர்ச்சியின் வேகம்- அசுர வேகம்- ஹஹ்-ஹா!
மறு நிமிடம்-
ஓஓஓ-யானைகள் வழி மறிக்கின்றன!
இன்னொரு ஒளி வீச்சு வருகிறது - கவனி!
சட்டென்று தோழர்களை இறுக்கிக்கொண்டது ஆர்ச்சி-அதன் ஜெட் அமைப்பு அதே கணத்தில் இயக்கம் பெற்றது-
எதிரிகளின் முகத்தில் ஆர்ச்சி கரியை பூசிவிட்டது!
அந்த ஒளிவீச்சு காரை தொட்டுவிட்டது! இன்னமும் நாங்கள் காரிலேயே இருந்திருந்தால் அப்பப்பா-
ஒளி-வீச்சின் ஆதிக்கம், மதம் பிடித்த யானைகளின் தாக்குதல் ஆகிய இரு வேறு சக்திகளுக்கிடையே சிக்குண்ட கார்கள் சின்னாபின்னமாயின-
நம்மை ஒழித்துக்கட்ட எதிரிகள் எல்லா வகை யுக்திகளையும் கடைப்பிடிக்கிற இந்த நெருக்கடியில் கால இயந்திரத்திலேறி ஓடிப்போவது புத்திசாலித்தனம் இல்லையோ?
இல்லை! இப்போது நாம் 'கோட்டை'யை சென்றடையவே முடியாது!
ஏதோ ஒரு மாய சக்தியால் தூண்டி விடப்பட்டதுபோல் கொடிய பறவைகளும் வேட்டையில் பங்கேற்க வந்தன-
கழுகுகள் ஆங்காரமாக வருகின்றன-கவனி!
கீழேதான் ஆபத்து என்றால் இங்கேயுமா...?


ஆர்ச்சி தன் மார்பு அறையை திறக்க, உள்ளிருந்து சூறைக்காற்று பீரிட்டு வெளிப்பட்டது...
உஷ்ஷ்
சிறகு பிய்த்துக் கொண்டு விடப் போகிறது... ஓடிப்போங்கள்!
ஆர்ச்சி...கீழேயும் கொஞ்சம் கவனி!


அருகிலிருந்த தென்னை மரத்தை வளைத்துப் பிடித்தது ஆர்ச்சி.
பழைய உண்டிவில் யுக்தியோ— பேஷ்-பேஷ்!
குறி தப்பாமல் அடிக்கப் பார்!


இயந்திர துப்பாக்கி கூட இதற்கு ஈடாகாது!
சடார்....
இது போதாது- ஆர்ச்சி!


ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விட்டன!
ஆனால் - இத்தோடு பிரச்னை தீர்ந்தது என்று சொல்ல முடியாதே!


ஆர்ச்சி ஓங்கி ஓர் இடி இடித்ததும் பக்கவாட்டுச் சுவர் பெயர்ந்து கொண்டது...
டமார்
மறுபடியும் அந்த மர்ம ஒளி வீச்சு வருகிறது பார்
இந்த வழியாக ஓடிப் போய்விடலாம்... வாருங்கள்!
ஒளி வீச்சு பட்ட மாத்திரத்தில் தெரு விளக்கு கம்பங்கள் அவர்களை குறி வைத்து வளைந்தன—
ஓடு-! அவ்வ நம்மை அணைத்து இறுக்க வருகின்றன!
மறுபக்கம் என்ன வகையான ஆபத்து காத்திருக்கிறதோ?
கட்டிடத்தினுள்ளே --
மறு பக்கம் போனால் தப்பி விடலாம்!
எதை வைத்து அவ்வளவு நிச்சயமாக சொல்கிறாய்?
ஆனால் மறுபக்கம்—
ஓ...நோ— பறந்த ஏரி!
ஏகப்பட்ட முதலைகள்... ஆர்ச்சியால்கூட நம்மை காப்பாற்றி கரை சேர்க்க முடியாது போகலாம்
அவர்கள் ஏரிக்குள் குதித்த மறு வினாடியே நீர்ப்பரப்பில் கொந்தளிப்பு ஏற்பட்டது...
அங்கே பார்-ராட்சஸ கோளம் ஒன்று மேலெழும்புகிறது!
என்ன வகை விபரீதமோ- இது?


பின்னல்—துரத்தி வரும் முதலைகள் எதிரே-இனம் புரியாத பயங்கர கோளம்-
எக்கச் சக்கமாக இடையில் மாட்டிக் கொண்டு விட்டோம்!
இம்முறை ஆர்ச்சி கூட நம்மை காப்பாற்ற முடியாது!
ஆனல் அடுத்து நிகழ்ந்த சம்பவம் அவர்கள் கனவிலும் எண்ணிப் பார்த்திராத ஒன்று-
ம்ம் - வாங்க-சீக்கிரம் நீந்தி வாங்க!
ஆண்டவன் செயல்! யாரோ மீட்பு குழுவினர்! நாம் பிழைத்தோம்!
ஆச்சரியம்! ஆர்ச்சிகூட ஒருகணம் ஏமாந்து போய் விட்டது!
முதலைகள் நெருங்கி வந்துவிடாதவாறு பார்த்துக் கொண்டது ஆர்ச்சி-
தாம்சன் – ஏறு-சீக்கிரம்!
இதோ!
ஆர்ச்சி-நீயும் வா!


ஆர்ச்சியின் டெலஸ்கோப்பிக் கைகளின் வழியாக மின்சாரம் பாய்ந்தது-
முதலைகளுக்கு புதுமையான அனுபவமாக இருக்கும் இது!
சீக்கிரம் ஏறி வாருங்கள்! உள்ளே-
ஸ்ஸ்ஸ்ஸ்...
மறுகணம்-
அந்த முட்டாள் முதலை எங்கே போய் பொய்ப்பல் கட்டிக் கொள்ளுமோ-தெரியலை!
கதவை மூடுங்கள்- இங்கே கணமும் தாமதிக்கலாகாது
க்ராக்!
ஆத்திரமடைந்த க்ருள்ஸ் இன்னொரு ஒளி வீச்சை அனுப்பி வைத்தன ஆனால்-
தப்பிவிட்டார்கள்! ஏரியின் கீழே பதுங்கிக் கிடக்கும் பாவிகள் அவர்களை மீட்டுச் சென்றுவிட்டனர்-
தொலைகிறார்கள்! இங்கே திரும்பி வர தைரியம் இராது அவர்களுக்கு!
ஊஊஊஷ்ஷ்
சமயோசிதமாக தருணத்தில் வந்து மீட்டதற்கு நன்றி!
எங்களுடைய ரோபோ-ஆர்ச்சி! இவன் விக்டர்-நான்-தாம்சன்! மரணத்தின் பிடியிலிருந்து எங்களை மீட்டு விட்டீர்கள்!


குகைப் ... ஒன்றின் வழியே நீர் பாப்பின் ...யில் பயணமானார்கள்-
சிலர் இன்னமும் தீவில் தலைமறைவாக ஒளிந்து திரிகிறார்கள்-
எங்களுடைய தீவை க்ருள்ஸ் ஆக்கிரமித்துக் கொண்டபோது நாங்கள் தப்பித்து ஏரிக்கு அடியில் பதுங்கி வாழ ஒரு வகை செய்து கொண்டோம்-
ஏரிக்கு அடியில் இருந்த பிரம்மாண்டமான குகை போன்ற அமைப்பினுள் சென்றடைந்த அந்தக் கோளம்-
கடலடி நகரம் என்று சொல்லத் தோன்றுகிறது! எல்லா வசதிகளும் இருக்கின்றன!
என்றாவது ஒருநாள் எங்களுடைய தீவை மீட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையோடு நாட்களை கழித்துக் கொண்டிருக்கிறோம்- ஆனால் எப்படி என்றுதான் தெரியவில்லை!
பின்னர்-
எங்களுடைய முதல் இலட்சியம் தீவிலேயே மாட்டிக் கொண்டு விட்ட எங்கள் சகாக்களை மீட்டு வருவது-
கம்ப்யூட்டர் மூளை படைத்த ஆர்ச்சி ஒரு மாமேதை-எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது!
தன்னடக்கத்திலும் சளைத்தவனில்லை- ஆமாம்!
தன் மார்பு அறையில் எப்போதும் இருக்கும் கருவிகளைக் கொண்டு மும்முரமாக வேலை செய்யத் தொடங்கி விட்டது ஆர்ச்சி-
தாம்சன்-அவன் என்ன செய்கிறான் என்று உனக்காவது புரிகிறதா?
என்ன விஷயமோ எனக்கும் புரியவில்லை!
க்ர்ர்


மூழ்கிக் கிடந்த ஒரு கப்பலிலிருந்து உலோக தகடுகளை வெட்டி எடுத்து வந்தது ஆர்ச்சி-
ஏதோ பெரிதாக திட்டமிட்டிருக்கிறான் என்று தெரிகிறது! என்னவாகுமோ?
ஆர்ச்சியின் செயல்களைப் பற்றி கவலைப்பட்டு வீணாக உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே...!
இதற்கிடையே, தீவில்-
அந்நிய ரோபோவின் வரவை தவிர்க்க, அனைத்து விலங்குகளும் கட்டுப்பாட்டின் கீழ் வைக்க வேண்டும்!
அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது!
ஒரு பெரிய நீர் யானை வெளியே தலை நீட்டியது-
நம் மாய ஒளி வீச்சு உயிரற்ற வற்றையும் உயிர் பெறச் செய்யும் அற்புத ஆற்றல் படைத்தவை- நமக்குத் தெரியாமல் இங்கே யாரும் ஊடுருவ முடியாது!
அந்த க்ருள்கஸின் கணிப்பு தவறு- இன்னொரு நீர் யானை வெளியேறி வந்தது-
கவனமாக ஓட்டு ஆர்ச்சி- க்ருள்ஸ் இருக்கிற பக்கம் போய் விடாதே!
ஆர்ச்சி சமர்த்து! திட்டமிடும் வேலையை என்னிடம் விட்டுவிடுங்கள்
பிரம்மாண்டமான உலோக நீர்யானையின் உள்ளே-
முதலில், தீவில் ஒளிந்து திரியும் மானிடர்களை தேடிப் பிடித்து மீட்க வேண்டும்-
க்ருள்ஸோடு நேரடி மோதலில் இறங்குவதோடு ஒப்பிடுகையில் இது ஆபத்தில்லாத பணிதான்!
அடுத்து உருவான நெருக்கடி அவர்கள் எதிர் பாராத ஒன்று!
ஆர்ச்சி அங்கே பார்- வேறு சில நிபந்தனைகள் தலை நீட்டுகின்றன-
நம்மை தாக்குவதற்கு அவற்றின் நோக்கம் என்பதாக தெரிகிறது!
உர்ர்ர்...


ஆர்ச்சி தங்களுடைய வாகனத்தை கரையில் ஏற்றியது-
ஆக்ரோஷமாக வருகின்றன பார்-
ஒட்டு மொத்தமாக வந்து தாக்கினால் நாம் தாக்குப் பிடிக்க முடியாது!


ஆனால் அசாத்திய ஆற்றலுடைய ஆர்ச்சி
கணப்பொழுதையும் வீணாக்கவில்லை-
ஓட்டும் பொறுப்பை நீங்கள் பாருங்கள்- நீர் யானைகளை சமாளிக்கும் பொறுப்பை ஆர்ச்சியிடம் விட்டுவிடுங்கள்!
முன்னால் வந்த நீர் யானை மீது அதிரடி
பாய்ச்சலாக பாய்ந்தது ஆர்ச்சி-
ஆயாயா ஹீ ஹீ!
ஆர்ச்சிகிட்டே உன் பாச்சா பலிக்காது!
ஊஹூம்-ஆர்ச்சியால் முடியும் என்று தோன்றவில்லை!
டமால்!
ஆ..ஆ..ஆ
இதற்கிடையே தாம்சன் அந்த நூதன வாகனத்தை
கட்டுப்படுத்தி ஓட்டத் தெரியாமல் தடுமாறினான்-
ஆர்ச்சி-இதை எப்படி ஓட்டுவது என்று தெரியவில்லை-
என்ன புதுத் தொல்லை!



மறுகணம்-
பிரேக் எங்கே இருக்கிறதோ-தெரியவில்லையே!
ஐயோ-தறிகெட்டு ஓடுகிறது!
கடைசி நீர் யானையையும் தாக்கி விரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது ஆர்ச்சி-
உர்ர்ர்...
இந்த மனிதர்களுக்கு சமர்த்து போதாது! என்னை மாதிரி எல்லோருக்கும் எலெக்ட்ரானிக் மூளை இருந்து விட்டால் பிரச்னை வராது!
உச்ச வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது ஆர்ச்சியின் படைப்பான உலோக நீர்யானை-
ஐயோ-யானைக் கூட்டத்தினூடே புகுந்து ஓடுகிறது!
நாம் திரும்பி வந்து விட்டதை க்ருள்ஸ் அறிந்தால் அக்கணமே பரலோகம் தான் நமக்கு!
மாய ஒளிவீச்சினால் தூண்டப்பட்ட ஒரு பெரியபாறைதோழர்களை நோக்கிஓடிக் கொண்டிருந்த ஆர்ச்சியை குறிவைத்து பறந்து வந்தது-
க்ருள்ஸின் சேஷ்டையா-இதுவும்?
தம் பிடித்து நின்று பாறையை தாங்கிப் பிடித்தது ஆர்ச்சி-
க்ராஷ்
ஆர்ச்சியா கொக்கான்னானாம்!


தறி கெட்டலைந்த யானை கூட்டமும் ஆர்ச்சியை தாக்க ஓடிவந்தது-
இந்தப் பாறையைக் கொண்டே உங்களையும் துரத்தியடிப்பேன்!
பாறை தாக்கி மரம் ஒன்றும் சரிந்து விழவே யானைக் கூட்டம் எடுத்துப் பிடித்தது ஓட்டம்!
சீக்கிரம் தோழர்களோடு போய் சேர்ந்து கொள்ள வேண்டும்! இல்லையேல் க்ருள்களால் அவர்களுக்கு ஆபத்து வரலாம்!
அந்த புதிர் வாகனத்தை நிறுத்த வழி தெரியாமல் திண்டாடினார்கள் விக்டரும், தாம்சனும்-
அதோ-ஒரு குக்கிராமம்! அங்கே தென்படும் வீரர்கள் க்ருள்ஸுக்கு ஊழியம் செய்பவர்களாக இருக்கலாம்!
குனிந்து மறைந்து கொள்வோம்! இதை நிஜ நீர்யானை என்று அவர்கள் ஏமாந்து விடக்கூடும்-நாம் தலை காட்டாத வரை ஆபத்து வந்து சேராது!
பீதியினாலும், கோபத்தினாலும் கூச்சலிட்டார்கள் அந்த வீரர்கள்-
இந்த விலங்கு நம் மாஸ்டர்களான க்ருஸ்ஸுக்கு கட்டுப்படவில்லை-
நம் கிராமத்தை நாசம் செய்யும் இந்த சைத்தானை ஒழித்துக் கட்டுவோம்!
க்ராஷ்



ஆனால்-மறுகணம்-
அங்கே பாருங்கள்-இரும்பு மனிதன்! உடனே க்ருஸ்ஸுக்கு தெரிவிக்க வேண்டும்!
தறிகெட்டு ஓடும் நீர்யானையை விரட்டிப் போகிறான் போலும்!
ஆர்ச்சியை பார்த்து விட்டார்கள்-நல்லதில்லை! பேரபாயம் வரப் போகிறது!
டம் டம் டம்
முரசறைந்து செய்தியை க்ருஸ்ஸுக்கு தெரிவித்தனர்-
அந்நிய ரோபோ திரும்பி வந்துவிட்டதாம்-உடன் இருந்த மானிடர்களை காணோமாம்!
ரோபோவை தேடிப் பிடித்து அழியுங்கள்-இம்முறை அவனை தப்ப விடக்கூடாது!
இதற்கிடையே-
ஓ-நோ.. ! நேராக குத்துப் பாறையை நோக்கி ஓடுகிறதே - ஐயோ!
ஆர்ச்சி நெருங்கி வந்து விட்டது-
ஸ்டாப்! ஸ்டாப்!
ஆனா-எப்படி-என்ன செய்யணும்னு தெரியல எங்களுக்கு-
பதுங்கிக் கொள் விக்டர்! இதுபோய் மோதும் போது தாக்குப் பிடிக்க ரெடியாக இரு!



இயந்திர நீர்யானை பாறை மீது போய் மோதும் காட்சியை காணச் சகியாமல் கண்களை மூடிக்கொண்டு விட்டது ஆர்ச்சி-
ஓ-! தோழர்களுக்கு அடி கிடி படாமலிருக்க வேண்டுமே!
பலத்த அதிர்ச்சியை எதிர்பார்த்து காத்திருந்த தோழர்கள் அப்படி ஏதும் நிகழாமல் போகவே எழுந்து நின்று பார்த்தார்கள் வியப்போடு-
ஹே என்ன இது-
அந்தப் பாறை வெறும் போலித் தோற்றம் போலிருக்கிறது- இப்போது நாம் குகைப்பாதை ஒன்றினுள் விரைந்து கொண்டிருக்கிறோம்-
செடி, கொடி, கிளைகளைக்கொண்டு மீண்டும் குகை நுழைவாயிலை மூடி விட்டு ஓடி வந்தது ஆர்ச்சி-
குகையின் நுழைவாயிலை மறைக்க பாறை போல் போலியாக உருவாக்கியிருக்கிறார்கள்-
மறு நிமிடம்-
ஏ-சைத்தானே! உன்னால் நாங்கள் படும் அவதியைப் பார்!
ஐயோ-விளிம்பில் சரிகிறது-வாகனம்!
ஆனால்- அடர்ந்த உறுதியான காட்டுக் கொடிகள் தாங்கிக் கொண்டதால் மோசமான விளைவு ஏற்படவில்லை-
தோழர்கள் எக்கச்சக்கமான இடத்தில் மாட்டிக்கொண்டு விட்டார்களே-
ஆர்ச்சி-எங்களை மேலே ஏற்று! சீக்கிரம்!
எந்த வினாடியிலும் க்ருள்ஸ் இங்கே வந்து சேரக்கூடும்!
வெளியே-அடிமை வீரர்கள் க்ருள்ஸிடம் நடந்ததை சொல்லிக் கொண்டிருந்தார்கள்!
ரோபோ சென்ற தடத்தில் போய் அதன் இருப்பிடத்தை கண்டு பிடியுங்கள்! உடனே ஒளி வீச்சை அனுப்பி ஒரேயடியாக அழித்து விடலாம்!
போங்கள்- போய் தேடுங்கள்!


கைவிடப்பட்டுக் கிடந்த விமானங்களை நோக்கி ஒளிவீய்ச்சு பாய்ந்தது-
அனைத்தையும் உயிர்ப் பித்து அனுப்புங்கள்-
ஒவ்வொன்றும் முடிந் தவரை நாசத்தை விளைவிக்கட்டும்!
விமானங்கள் சீறிக்கொண்டு கிளம்பின-
ஊடுருவிகள ஒளிந்து கொண்டிருக்கும் இடத்தை குறி வைத்து செல்லுமாறு உத்தரவிடு-
இம்முறை அவர்கள் தப்ப முடியாது!
விர்..ர்..ர்...ர்..
விர்..ர்..ர்..ர்...
இதற்கிடையே-
சீக்கிரம் இங்கிருந்து எங்களை மீட்க் வழி செய்- ஆர்ச்சி!
இந்தக் கொடிகள் சட்டென அறுந்து போனால்-
கத்தவேண்டாம்! ஆர்ச்சிக்குத் தெரியும் என்ன செய்யவேண்டும் என்று!



காட்டுக் கொடிகளை விசி எறிந்தது ஆர்ச்சி-
ஆங்- கச்சிதமாக மாட்டிக் கொண்டு விட்டது!
மூன்றுடன் எடையை அந்தக் கொடிகள் தாங்குமா?
ஆர்ச்சியின் கணிப்பு தவறாகாது!
இன்னுமொரு கொடியை எறிந்து இழுத்துப் பிடித்தது ஆர்ச்சி-
இழுத்துவிட இயலுமா உன்னால்!
அப்படியே ஆடாது அசையாது இருங்கள்- நொடியில் மேலே ஏற்றி விடுகிறேன்!
ஏய் - அவனுக்கு எரிச்சல் மூட்டாதே!
நிதானமாக ஆனால் உறுதியாக மேலே இழுத்தது ஆர்ச்சி-
மெள்ள-மெள்ள
ஒன்-டு-த்ரீ-
ஆர்ச்சி பலசாலியாக இருக்கலாம்-ஆனால் அவன் நிற்கும் பாறை விளிம்பு சரிந்துவிடும் அபாயம் உண்டு-
கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறியது வாகனம்-
நண்பர்களின் உயிர் ஆர்ச்சியின் கையில் மிக மிக எச்சரிக்கை யாக செயல்பட வேண்டும்-!
அதே சமயம் குகைக்கு
இரும்பு மனிதன் காலடி தடம் தென்படுகிறது!
தடம் பாறை வரை சென்று நின்று விட்டதே-என்ன சூழ்ச்சியோ-தெரியவில்லை!


அதே கணத்தில்-க்ருள்ஸின் மாயஒளி வீச்சினால் தூண்டப்பட்ட விமானம் ஒன்று அங்கே வந்தடைந்தது-
எதிரிகளை கண்டுபிடிக்க மாஸ்டர்கள் இதை அனுப்பி வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது!
ஆனால் நேராக குத்துப் பாறைமீது போய்மோதப் போகிறதே!


மறு விநாடி-பலத்த ஒசையை தொடர்ந்து குகை முழுக்க பயங்கர அதிர்ந்தது-
அந்த விநாடியில் குகை அதிர்ந்ததில் ஒரு கொடி அறுந்து விட்டது-
ஐயோ-கீழே நழுவுகிறது-தொலைந்தோம்!


விமானம மோதியதால, குகை வாசலை மறைத்து ஆர்ச்சி வைத்துவிட்டு வந்த செடி, கொடிகள் விலகி பாதை வெளிப்பட்டது-
க்ருள்ஸின் அடிமைகள் சந்தோச ஆரவாரம் செய்தார்கள்-
பா.றையின் அடிப் பாகத்தில் ஒரு நுழை வாயில் தெரிகிறது பார்-
இரும்பு மனிதன் மாயமாக மறைந்து போனது எப்படி என்று இப்போது புரிந்து விட்டது!
உள்ளே நுழைந்து-தேடுங்கள்!


ஆர்ச்சி தன் காலடியில் பாறை சரிவதை உணர்ந்து திடுக்கிட்டது.
யாஹூஹூ-நாம் கீழே விழு கிரோம்-திறப்பை மூடிக் கொள்ளுங்கள்-!
தளம் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறதோ? ஒரு எலும்பு கூட மிஞ்சப்போவதில்லை!


சட்டென்று தன் ஜெட் அமைப்பை தூண்டி விட்டது ஆர்ச்சி-
விழும் வேகத்தை கணிச மாக குறைத்துவிட்டேன்-
சே-நாம் இங்கே வந்தது தப்பு-ஹும்-இப்போது பேசி பிரயோஜனம்!
ஐயோ-இப்படியா நம் கதை முடிய வேண்டும்!


முடிவில்-
ஹேய்ய்! தண்ணீரில் விழுந்து விட்டோம் போலிருக்கிறது!
ஒரே இருட்டாகிவிட்டது- எஞ்சினும் அணைந்து விட்டது!
டமார்
நீருக்குள் மூழ்கிவிட்ட உலோக நீர்யானையை ஆர்ச்சி கட்டி இழுத்தது வெளியே-
நாம் மறுபடியும் நகர்கிறோம் - ஆர்ச்சி நம்மை இழுக்கிறது போலும்-
சுவாசிக்க காற்று பற்றாமல் போய்விடு முன் நம்மை கரை சேர்த்து விட்டால் சரி-
இதற்கிடையே-
இங்கே தடம் நின்று விட்டது-
மாஸ்டர்களுக்கு தெரிவிப்போம்-
க்ருள்ஸ் துரித நடவடிக்கை மேற்கொண்டன-
அந்நிய ரோபோவின் அழிவை உறுதிசெய்ய ஆக்டோபாஸை தூண்டவும்-
குகையினுள்ளே தேடும் படலம் தொடர்கிறது மாஸ்டர்-


விரோத ஜந்துக்கள் செடி, கொடி மறைவிலிருந்து வெளிப்பட்டன-
ரிமோட் கண்ட்ரோல் விசையை இயக்கி விடு-அவற்றின் கண்கள் பார்ப்பதை எல்லாம் பதிவு செய்யட்டும்-
யாருமே இவற்றிடமிருந்து தப்பவே முடியாது-
அந்த ஜந்துக்கள் குகையினுள் நுழைந்த பின்னர்
இரும்பு மனிதன் கீழே இறங்க கொடிகளை பின்னி தொங்க விட்டிருக்கிறான்-
நிலத்திலும், நீரிலும் செல்லக்கூடிய ஆற்றலுடையவை இந்த ஜந்துக்கள்!
வாகனத்தினுள்ளே-
காற்று போதவில்லை-மூச்சுத் திணறுகிறது எனக்கு!
இந்த நெருக்கடி ஆர்ச்சிக்கு தெரியாததல்ல-உடனடியாக நம்மை வெளியேற்ற ஏதாவது செய்யும்!
அதையடுத்து-
சாதித்து விட்டோம்-ஹைய்யா!
ஹே-நாம் எங்கே இருக்கிறோம்!
எப்படி மேலே ஏறிப் போகிறதாம்?
பீதி நிலவும் விழிகள் சில மேலிருந்து உறுத்து பார்த்துக் கொண்டிருந்தன-
அது-க்ருள்ஸ் கும்பலின் ரோபோ-! நம்மைப் பிடிக்க வந்திருக்கிறது!
பாறைகளை உருட்டித் தள்ளி அதை ஒழித்துக் கட்டுங்கள் எவ்வளவு காலம்தான் ஓடி ஒளிந்து வாழ்வது-எதிர்த்துப் போராடுவோம்!
ஆர்ச்சி-ஜாக்கிரதை!


ஐயோ!,
நசுங்கி சாகப் போகிறோம்!
பாறைகளை விலக்கித் தள்ளியது ஆர்ச்சி-
பொறுங்கள்-நான் ஆர்ச்சி-க்ருள் அல்ல!
எவ்வளவு அனாயாசமாக பாறைகளை தாங்கிவிட்டது!
நாங்கள் எதிரிகள் அல்ல-
தீவு வாசிகளுக்கு உண்மை புரிந்ததை அடுத்து-
மார்பு அறையில் எப்போதும் இதை வைத்திருப்பது இம்மாதிரி நெருக்கடிகளை சமாளிக்கத்தான்!
க்ருள்ஸ் எங்களையும்தான் துரத்திக் கொண்டிருக்கின்றன-
உங்களைப்போலவே நாங்களும் ஆபத்தில்தான் இருக்கிறோம்!
குகையினுள்ளேயிருந்து ஏதோ வெளிவருகிறது-
அங்கே-வருவது-கொள்ளி வாய் பிசாசுகளா என்ன?
அங்கே பாருங்கள்-அந்த கண்கள் படு-பயங்கரம்!
அந்த ஜந்து தன் துதிக்கைகளை ஆக்ரோஷமாக நீட்டியது-
அவை க்ருள்ஸின் ஆக்டோபஸ்கள்!
அகப்பட்டோமோ-தொலைந்தோம்!


சீக்கிரம் அவர்களை மேலேற்றுங்கள்!
ஊஹூம்-நெருங்கி வந்துவிட்டாம்!
ஐயோ-அகப்பட்டுக் கொள்ளப் போகிறோம்!


துதிக்கைகள் நீண்டன-
ஆர்ச்சி-வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்க இதுவா தருணம்?
இவைகளுக்கு டெலவிஷுயர் கண்கள் இருக்கின்றன-ஆர்ச்சியின் கம்ப்யூட்டர் மூளையில் ஒரு யுக்தி பளிச்சிடுகிறது!



ஆர்ச்சியின் மார்பு அறையிலிருந்து கரிய திரவம் பீச்சியாயிற்று-
ஆயாயா ஹீஹீ- அவை பார்க்க முடியாமல் பண்ணி விட்டது ஆர்ச்சி-
டு..ஷ்.ஷ்.ஷ்.ஷ்!
அங்கே க்ருள்ஸ் கண்ட்ரோலில்-
அந்த சைத்தான் ரோபோ டெலவியூயரை பார்க்க முடியாமல் பண்ணி விட்டது- அதனால் ஆக்டோபஸ்களை தொடர்ந்து வழிநடத்த முடியவில்லை-
அழிவு விசையை தூண்டு! அவற்றின் துதிக்கையில் அகப்படும் அனைத்தையும் துவம்ஜம் செய்யட்டும்!
இதற்கிடையே-
இழுங்கள்-!
அம்மாடி- தப்பித்தோம்- ஒரு வழியாக!
ஆர்ச்சி ஏன் தப்பியோடி வர எண்ணவேயில்லை?
அபார ஆற்றலோடு ஒரு துதிக்கையை இறுகப் பற்றியது ஆர்ச்சி-
ஏய் ஆர்ச்சி- விலகி வா- அப்பால்!
என்ன செய்யப் போகிறான்?
உபயோக நீர் யானையை பற்றிக் கொள்ளச் செய்யப் போகிறேன்- பிறகு பாருங்களேன் வேடிக்கையை!


விலகி ஓடுங்கள்-படுத்துக் கொள்ளுங்கள்-ஆ ஆ ஆபத்து!
காரணம் இல்லாமல் சொல்லாது-பதுங்குங்கள் எல்லோரும்-
பழுதடைந்த இயந்திர நீர்யானை பிடிபட்டதும்-
எல்லோரும் கீழ்ப்படிந்தனர்-
உங்களை பாதுகாக்க தடையை வைக்கிறேன்!
என்ன வகை அபாயம் என்று சொல்லவே இல்லையே நீ!
கேள்வி கேட்காதே விக்டர்!
ஆக்டோபஸ்ஸின் உறுதியான பிடியில் சிக்குண்டு நொறுங்கியது இயந்திர நீர்யானை-அப்போது-
பூம்!
அங்கே பெருத்த வெடிமுழக்கம் எழுந்தது-
பதற்றத்தோடு தீவு வாசிகள் எழுந்து நோக்கியபோது-
பழுதடைந்த நீர் யானை வெடித்து விட்டது-ஆர்ச்சி செய்த விஷமத்தின் தொடர் விளைவு! பாறைச் சரிவு
அந்த ஆக்டோபஸ்களின் கதை முடிந்தது-


ஒரு தீவுவாசி முன் வந்தார்
நாம் இருக்கும் இடம் இப்போது க்ருள்ஸுக்கு தெரியும்-நம்மை ஒழித்துக் கட்டாமல் ஓயமாட்டார்கள்!
இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறாய் ஆர்ச்சி?
பத்திரமான மறைவிடம் ஒன்றை நொடியில் உருவாக்கி விடலாம். தைரியமாக இருங்கள்!
எங்கே ஓடுகிறாய்-?
ஒரு சிறிய, குறுகலான பள்ளத்தாக்கில்-
க்ருள்ஸ் மீண்டும் நம்மை தேடிக் கண்டுபிடிக்குமுன் பதுங்கிக்கொண்டு விட வேண்டும்!
அப்படியானால் சீக்கிரம் வேலையை தொடங்கு!
மின்னல் வேகத்தில் இயங்கியது ஆர்ச்சி
பத்தே நிமிடங்களில் மர உருளைகளைக் கொண்டு ஒரு வீட்டை கட்டி முடித்து விட முடியாதா என்ன?
மளமளவென்று வேலை நடந்தது-
அப்பப்பா-என்ன ஒரு ஆற்றல்-செயல்வேகம்!
கஷ்டமான வேலையை ஆர்ச்சியிடம் விட்டு விடுங்கள்-மறைப்புக்கு செடி, கொடிகளை நீங்கள் சேகரித்து எடுத்துவந்தால் போதும்!
அவனை அதிகமாக புகழாதீர்கள்! கண்டுகொள்ளாத மாதிரி இருந்துவிடுங்கள்-அதுதான் நல்லது!


க்ருள்ஸுூம் சோர்ந்து போய் விடவில்லை
ஒளி வீச்சை பாய்ச்சி காட்டு விலங்குகளை தூண்டி விடுவோம்- மனித வாடையை மோப்பம் பிடித்தே அவர்களின் இரகசிய மறைவிடத்தை அவை கண்டு பிடித்து விட முடியும்!
இரு கால் ஜீவன்களை தேடிப் பிடித்து அழிக்கவும்-நாங்களும் பின் தொடர்ந்து வருகிறோம்!
இம்முறை அவர்கள் அழிந்து போவது உறுதி-



பதுங்கி வாழ ஒரு வீடு ரெடி-
செடி, கொடிகளைக் கொண்டு மூடுங்கள் வீடு யார் கண்ணிலும் படாதவாறு!
இம்முறை க்ருள்ஸ் என்ன வகை யுக்தியை கையாளப் போகின்றனவோ-
க்ருள்ஸினால் தூண்டப்பட்ட காட்டு விலங்குகள் ஆக்ரோஷமாக தங்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கும் சங்கதி அவர்களுக்குத் தெரியாது-
மனிதர்களையும், அந்நிய ரோபோவை யும் தேடிப் பிடித்து அழிக்கவும்!


சில நிமிடங்களுக்குப் பின்-
அதென்ன சப்தம்? யானைகள் மந்தையாக ஓடிவருவது போல் கேட்கிறதே!
ஆமாம்-! ஆபத்து நெருங்கி வருமுன், என்னவென்று தெரிந்து கொள்வது நல்லது!
தீவு வாசிகள் மிரண்டு வீட்டினுள் போய் பதுங்கிக் கொள்ள-
வாருங்கள் என்னோடு- மேலே ஏறிப் போய் பார்ப்போம்!
ஏய்-ஏய்-கொஞ்சம் மெள்ளப் போயேன்!
சொல்லாதே! வீம்புக்கு இன்னும் மேகமாக ஏறுவான் சண்டாளன்!
அடுத்து அவர்கள் கண்ட காட்சி படு பயங்கரமானது-
ஆயிரக் கணக்கில்- வெறி பிடித்து ஓடி வருவது போல்!
மோப்பம் பிடித்து நம்மை குறி வைத்து வருகின்றன நம்மை அவை பார்த்து விட்டால், பத்து ஆர்ச்சிகள் சேர்ந்தாலும் நம்மை காப்பாற்ற முடியாது!
ஹம்ம்- சிக்கலான சங்கதி!
தன் உள்ளமைப்பு ஹீட்டரை இயக்கியது ஆர்ச்சி.
தீ மூட்டி அந்த மத-யானைகளை வெருண்டோடச் செய்வோம். இந்த யுக்தி முன்பு பலமுறை பலித்திருக்கிறது!
ஆனால் காற்று எதிர் திசை நோக்கி, அதாவது நம் இரகசிய மறைவிடத்தை நோக்கி அல்லவா வீசுகிறது!


அதற்கும் ஒரு பதில் வைத்திருந்தது ஆர்ச்சி-
சமத்துடா கண்ணு!
ஆர்ச்சி மூடனில்லை இதோ- காற்றுப் பீச்சி! இனி தீப்பிழம்புகள் விலங்குகளை நோக்கியே பாயும்!
நெருப்பு ஏற்படுத்திய பீதி க்ருள்ஸினால் உண்டான பயத்தைவிட தீவிரமாக பாதித்தது அந்த விலங்குகளை எனவே-
ஹைய்யா-பயந்து பின் வாங்கி ஓட்டம் பிடிக்கின்றன!
இவற்றை பின்தொடர்ந்து சென்றால் க்ருள்ஸை அழிக்க ஒரு வாய்ப்புக் கிட்டலாம்.
வேகமாக தீயை முழுவதுமாக அணைத்தது ஆர்ச்சி சிலகணங்களுக்குப் பின்-
பெரிய கிழ யானை புதை சேற்றில் சிக்கிக் கொண்டு விட்டது-
ஐயோ-பாவம்! அதை கரையேற்ற முடியுமா பார் ஆர்ச்சி!
ஙாஙாாா!
இந்த காட்டுக் கொடியினால் கட்டி இழுத்துப் பார்ப்போம்!
தாங்குமா?
யானையின் அதிர்ஷ்டம் கொடி அறுந்து விடவில்லை-.
சபாஷ் ஆர்ச்சி!
ஒரு வழியாக கரையேறி விட்டது!
ப்ளாக்!



துதிக்கை ஒன்று வாஞ்சையோடு ஆர்ச்சியின் கழுத்தை சுற்றியது-
ARCHIE
நன்றி சொல்கிறது- அத்தோடு நட்புணர் வை தெரியப்படுத்து கிறது!
ஐடியா-! க்ருள்ஸ் இருக்கு மிடத்தை சென்றடைய சுலபமான வழி ஒன்று சொல்லட்டுமா?
மிரண்டு ஓடிய யானைக் கூட்டத்தின் பின்னே சென்றது அந்த கிழ யானை-
ம்ம்-வேகமாக நட!
ஆர்ச்சி-கொஞ்சம் குனிந்தே இரு!
அந்த மந்தையோடு சேர்ந்து கொண்டால் நம்மை யாரும் கண்டு கொள்ள முடியாது!
க்ருள்ஸின் தலைமையகம் இயங்கி வந்த நகரத்தில்
ஜாக்கிரதை! மிரண்டோடி வரும் யானைகளின் கீழே மாட்டிக்கொண்டு நசுங்கி போய் விடாதீர்கள்-
இவை இப்போது நம் சக்திக்கு உட்பட்டிருக்க வில்லை!
ஓடு!
க்ருள்ஸ் ஓட்டமாய் ஓடி ஒதுங்கிக் கொண்டு விட்டன-
அவசரம்-அவசரம்-மாய ஒளியை பாய்ச்சி ஏதாவது ஒன்றைத் தூண்டி மத யானைகளை திரும்பி ஓடச் செய்யவும்!
ஞ்யா...யாா:!
கேட்டாயல்லவா-விக்டர்? நாம் உடனே கீழே குதித்து விடவேண்டும்!


அடுத்த விஞடி மாய ஒளி வீச்சு பளீரிட்டது-
ராட்சஸ க்ரேன்களை குறி வை-!


இதற்கிடையே அங்கே நிலவிய குழப்பத்திஞூடே-
குதியுங்கள் நாம் விலகி சென்று விடுவோம்!
அந்த மாய ஒளி வீச்சுக் கருவியை கைப்பற்றி விட்டால் க்ருள்ஸை வெற்றி கொண்டுவிட்ட மாதிரிதான்! ஆனல்-அது சுலபத்தில் சாத்தியமாகும் என்று தோன்ற வில்லை!


ஒளிவ்ச்சு கிரேன்களை தூண்டிவிட்டிருக்கிறது-
தறிகெட்டு ஓடும் யானைகளை தேக்கி நிறுத்த அரணாக அணி வகுக்கின்றன-
மிரட்சியடைந்த யானைகள் பயங்கரமாக பிளிறின-
யானைகளின் ஓட்டம் தடைபட்டு விட்டது-
ஆனாலும் நெருக்கடி ஓயவில்லை-


திரும்பி ஓட்டம் பிடித்தது யானைக் கூட்டம்-
அற்புத ஆற்றல் படைத்த அந்த ஒளிவீச்சு கருவி மட்டும் நம் வசமானால்-
எதற்கு அந்த வீண் கற்பனை?
வெற்றி ஈட்டிவிட்ட திருப்தி-யோடு க்ருள்ஸ் கோபுரத்தை விட்டு அகன்றன-
க்ருள்ஸ் போகின்றன பார்-! ஒளி வீச்சு கருவி அம்போன்னு கிடக்கிறது-! ஒரு ஐடியா சொல்லட்டுமா?
ஆபத்து விலகி விட்டது-வா போகலாம்!
திட்டத்தை இன்றிரவு செயல் படுத்தலாம் நானும் விக்டரும் கோபுர உச்சியை சென்றடைய நீதான் உதவி செய்ய வேண்டும்-
உன் திட்டம் பைத்தியக்காரத் தனமாகப் படுகிறது
ஆர்ச்சிக்கு திட்டம் பிடித்திருக்கிறது!
அன்றிரவு-நிலா வெளிக் கிளம்பியதும்-
உள்ளே இறங்க உன் வெட்டுக் கருவியை கொண்டு கூரையில் வழி ஏற்படுத்து!
ஆபத்தான முயற்சி-க்ருள்ஸின் பார்வையில் பட்டுவிட்டால் அக்கணமே சமாதி தான் நமக்கு!
zzzzzzz!


மெள்ள- மெள்ள-
உள்ளே வேறு யாரும் இல்லை என்பதால் உறுதி செய்து கொண்டு விட்டா யல்லவா?
யாரும் காண வாய்ப்பில்லாத உத்தரவான சூழ்நிலை-
நம் இலக்கை சரியாக குறி வைத்து குகைப் பாதையை தோண்டு ஆர்ச்சி-
கம்ப்யூட்டர் மூளை தவறு செய்வதே கிடையாது!
தலைக் கனம்!
சற்று நேரம் கழித்து-
கச்சிதமாக முடிந்து விட்டது வேலை! க்ரேன் அருகேவந்து சேர்ந்து விட்டோம்!
உஷ்ஷ்-! க்ருள் காவலாளி ஒருவன் நிற்கிறான்- ஜாக்கிரதை!
கவலைப்படாதே- வேறெங்கோ போய்க் கொண் டிருக்கிறான்!
தோழர்கள் கிரேன் மீது ஏறினார்கள்
ஓசை ஏற்பத்தாமல் மெள்ளத் தட்டு ஆர்ச்சி-
இந்த திட்டம் சரிபட்டு வராது என்றே இன்னமும் சொல்கிறேன்-எங்கேயாவது தவறு ஏற்பட்டு எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டுவிடப் போகிறோம்!



கிரேஸின் மேற்பகுதி கோபுரத்தை நெருங்கியது-
புலம்பாமல் வாயேன்!
உயிரின் மீது ஆசை இருக்கையில் எப்படி புலம்பாமல் இருப்பதாம்?
அப்போது திடீரென்று ஆபத்து ஒன்று உருப் பெற்றது.
நான் முதலில் குதிக்கிறேன் கோபுரத்தின் மேல் தளத்தில்-
இங்கிருந்து தவறி விழுந்தால் ஐயோ-
ஓ.கே- ரெடியா?
கோபுரத்தின் உச்சியை நெருங்கியதும்-
இன்னும் சில அடி தூரம்தான்!
எனக்கு ஏனோ உடம்பெல்லாம் நடுங்குகிறது!
ஆர்ச்சி மீது பாய்ந்தது அந்தச் சிறுத்தை.
ஏய்- என்ன இது?
ஏன் அந்தரத்தில் தொங்குகிறோம்? ஆர்ச்சிக்கு என்ன ஆயிற்று?
கர்..ர்..ர்..
ஐயோ- சிறுத்தை- ஆர்ச்சியை தாக்குகிறது!
நம் கதி- அப்போதே சொன்னேன்- வேண்டாம் என்று!


அங்கே எழுந்த சலசலப்பு க்ருள்ஸின கவனத்தை ஈர்த்துவிட்டது.
அங்கே பார்-அந்நிய ரோபோவும், அதன் சகாக்களும்-
நம்மை பார்த்து விட்டன- தொலைந்தோம்!
சட்டென்று ஒளிவீச்சு கருவியை தோழர்களை நோக்கி திருப்பியது ஒரு க்ருள்-
ஒற்றர்கள் இம்முறை செத்தொழிவது நிச்சயம்!
மிகக் கவனமாக குறிவை! பிழை ஏற்படவே கூடாது-
ஒளிவீச்சு நம்மீது பாயப்போகிறது-
ஆர்ச்சி அருகில் இருந்தும் நம்மை காப்பாற்றமுடியாத நெருக்கடி-
முதலில் அந்த ரோபோவை குறி வை- அதுதான் மிக ஆபத்தானது-அதை வசத்தில் கொண்டு வந்துவிட்டால் பிறகு இந்த மானிடர்களை அழிப்பது சுலபம்
செய்வதறியாது இருவரும் திணறிப் போய் செயலற்று நின்றுவிட்ட கணத்தில்-
ஆர்ச்சி- ஜாக்கிரதை!


தாம்சனின் எச்சரிக்கைக் குரல் ஆர்ச்சியை எட்டிய அதே கணத்தில்-
பிரமாதம்!
ஆர்ச்சியை தாக்கி விட்டார்கள் சண்டாளர்கள்- ஐயோ- கூண்டோடு கைலாசம்தான் நமக்கு!
யீ யீ யீ-
ஆற்றல் மிக்க ஒளிவீச்சினால் பாதிக்கப்பட்ட ஆர்ச்சி ஓல-மிட்டவாறு தள்ளாடியது-
நம் ஆளுகைக்குள் வந்துவிட்ட அந்த ரோபோவை தூண்டி அந்த மானிடர்களை அழிக்கச் சொல்-
தொலைந்தோம்!
இந்த ஆபத்திலிருந்து எப்படிதான் நாம் தப்பிக்கப் போகிறோமோ-!



ஆர்ச்சியிடம் பெருத்த மாற்றம் ஏற்பட்டது-
அழிப்பேன்-அழிப்பேன் எல்லா மானிடர்களும் எதிரிகள்-
குட்-! க்ரேனை சாய்த்து அவர்களை தீர்த்துக்கட்டப் போகிறது!
ஏய்ய்-ஆர்ச்சி-என்ன என்ன இது-நாங்கள் தோழர்கள் அல்லவா?
கிரேனை அப்படியே அலாக்காக தூக்கி எடுத்தது ஆர்ச்சி-
நமக்கு எதிராக திரும்பிவிட்டது ஆர்ச்சி-
அந்த ஒளிவீச்சின் பாதிப்புதான் காரணம்!
செத்துப் போங்கள்! க்ருள்ஸின் எதிரிகளே ஒழிந்து போங்கள்!
வெறியோடு இயங்கியது ஆர்ச்சி-
பயல் தறிகெட்டுப் போய்விட்டான்-
இறுகப் பிடித்துக் கொள் விக்டர்-! உலுப்பி நம்மை விழச் முயற்சிக்கக் கூடும்!
வெற்றிக் களிப்பில் உற்சாகமாக கத்தின அந்த அயல் கிரக ஜந்துக்கள்-
க்ரேனை பூமியில் தூக்கி அடித்து அவர்களை தீர்த்துக் கட்டு!
வே-வேண் டாம்- அப்படி செய்யாதே ஆர்ச்சி!
பூனை எலியை விட்டுப் பிடித்து பாவ்லா பண்ணுவதுபோல் அவர்களை அலைக்கழிக்கிறது அந்த ரோபோ-


திடீரென்று கால் இடறியதால கீழே விழுந்தது ஆர்ச்சி-
அதிர்ஷ்டவசமாக நாம் இப்போது ஆற்றுக்கு நேர்மேலே இருக்கிறோம்- விழுந்ததும் நீந்த ரெடியாக இரு-
யீ..யீ...யீ...
ஆற்றினுள் விழுந்து விட்ட அவர்களுக்கு சமாதி அங்கேயே தான்!
அவர்களை விடாதே- விரட்டிப் பிடித்து ஒழித்துக் கட்டு!
எக்காரணம் கொண்டும் அவர்கள் தப்பிவிட லாகாது!
ஆங்காரத்தோடு க்ரேனை வீசி எறிந்தது ஆர்ச்சி-
செத்தொழியுங்கள்!
ஹூம்-மயிரிழையில் தப்பி விட்டோம்-
இத்தனை காலமும் உயிர் காக்கும் தோழனாக இருந்து வந்த ரோபோவே இப்போது எமனாகிவிட்டது கொடுமை-
அற்புத ஆற்றல் படைத்த ஆர்ச்சி ஆற்றை நோக்கி ஓடியது-
க்ருள்ஸின் அடிமை நான்-அவங்களுடைய எதிரிகளை அழிப்பேன்-
கொஞ்சமும் கருணை காட்டாதே!
ஹெக்-ஹெக் அவர்கள் தப்பிக்கவே முடியாது!


விரட்டிக் கொண்டுபின் தொடர்ந்தது ஆர்ச்சி-
சண்டாளன் விடாமல் துரத்தி வருகிறானே?
நீந்து-வேகமாக நீந்து- எதிரே ஒரு குகை அமைப்பு தெரிகிறது பார்!
கோபாவேசமாக கத்திக் கொண்டு ஆர்ச்சியும் பின் தொடர்ந்தது-
ஒற்றர்களை-கொல்-! தீர்த்துக்கட்டு-!
சற்றுத் தொலைவில் செடி, கொடி புதராக மண்டித் திரிந்தது-நீரோட்டத்தின் பாதையில்-!
அந்த மறைப்புக்குள் நுழைந்து விட்டால் நாம் உயிர் பிழைக்க ஒரு வாய்ப்புக் கிட்டலாம்!
ஆனால் அதுவரை எனனால் தாக்குப் பிடிக்க முடியும் என்று தோன்றவில்லை!
அப்போது-திடீரென்று முதலைகள் பெரும் எண்ணிக்கையில் வரத் தொடங்கின-
ஐயோ- முதலைகள்!
சாவு நிச்சயம்!-ஆர்ச்சி கையிலா-இல்லை முதலைகள் என்பதுதான் கேள்வி இப்போது-
இருதலைக் கொள்ளி எறும்பாக தவித்துப் போனார்கள் தோழர்கள்-
ஆயா ஹீஹீ-க்ருள்ஸின் மரண தண்டனை இப்-போது நிறைவேற்றப் படும்!


ஆர்ச்சி தறிகெட்டுப் போகாதிருந்தால் முதலைகளிடமிருந்து நம்மைக் காப்பாற்ற ஒடோடி வந்திருக்கும்-
ஹூம்ம்-புலம்பி பிரயோஜன மில்லை விக்டர்-கடைசி பிரார்த் தனையை சொல்லிக் கொள்ள ஆரம்பி!
திடீரென்று ஆர்ச்சியின் டெலஸ் கோபிக் கரங்கள் நீண்டன-
ஆவ்வ்-மு-முதலை-கவ்-விக் கொண்டு விட்டது - நம்மை!
முதலையல்லடா முட்டாள்- ஆர்ச்சி!
சண்டாளர்கள் மேலே இருந்து கவனித்து கொண்டிருந்தன-
ரோபோவும், மானிடர் களும் புதர் மறைவில் போய் விட்டதால் நடப்பது எதுவும் தெரியவில்லை!
நம் அடிமை-மரண தண்டனையை நிறை வேற்றுமல் ஒயாது!


மானிட ஒற்றர்களே-செத்தொழியுங்கள்!
ஆனால் மறைவுக்குள் சென்றடைந்ததும்-
உஷ்ஷ்-சமர்த்தாக மேலே ஏறிக் கொள்ளுங்கள்! முதலைகளை கவனிக்கவேண்டிய வேலை இருக்கிறது எனக்கு!
ஹே - எ - என்ன இது?
நம்ப முடியவில்லையே-! ஆர்ச்சி எப்படி திடீரென்று நமக்கு உதவி செய்தது? க்ருள்ஸை ஏமாற்றி ஏதோ சூழ்ச்சி நாடகம் ஆடுகிறது என்று நினைக்கிறேன்!
சரியாகச் சொன்னாய்! பார்-அந்த முதலைகள் படும் பாட்டை!
விஷமத்தனமான சிரிப்பு போன்ற ஓசைஒன்றுஆர்ச்சியிடமிருந்து கேட்டது-
ஆர்ச்சியிடம் இன்ஸுலேட்டர் வசதி இருப்பது அறியாத முட்டாள்கள்-அந்த ஒளி வீச்சு ஆர்ச்சியை பாதிக்கவேயில்லை-! ஆர்ச்சி சமர்த்து-! அடுத்து க்ருள்ஸை முறியடிக்கும் வழியைப் பார்ப்போம்-!
இதைக் கேட்க எவ்வளவு சந்தோஷமாக-இருக்கிறது-தெரியுமா?
ARCHI


சற்றைக்கெல்லாம்-
க்ருள் மாஸ்டர்களே! அடிமை திரும்பி வருகிறேன்- உத்தரவை கச்சிதமாக நிறை வேற்றி விட்டு!
வெளியே தலை நீட்டாதே தாம்சன்! ஆர்ச்சியின் ஏமாற்று வேலை அம்பலமாகி விடப் போகிறது!
ஆனால் -
ஒற்றர்களை அழித்து விட்ட பின்னர் ரோபோவின் சேவை நமக்கு தேவையில்லை- ஒளி வீச்சை பாய்ச்சி அதை உடனே அழித்து விடு!
ஆமாம்-! அந்த ரோபோ படு ஆபத்தானது-!
அதே கணத்தில்-
ஆர்ச்சி. ஜாக்கிரதை!
ஒளி வீச்சிலிருந்து மயிரிழையில் விலகிக் கொண்டு விட்டது அதிமேதை ஆர்ச்சி! க்ருள்ஸின் மோசடி பலிக்கவில்லை!
தன் வலிய தோளினால் அந்தக் கட்டிடத்தை ஆவேசமாக மோதியது ஆர்ச்சி-
புராதன கட்டிடம்-என்னமாய் அதிர்கிறது பார்!
இரண்டே நிமிடத்தில் கட்டிடம் சரிவது நிச்சயம்!


பீதியடைந்த க்ருள்ஸ் ஒளிப் பாய்ச்சல் கேட்டின் கீழ் ஆர்ச்சியை வரவழைக்க முயன்று தோற்றுப் போனார்கள்-
விடாதே- நொறுக்கித் தள்ளு ஆர்ச்சி-
கட்டிடம் அதிர்கிறது- இன்னும் ஓரிரு விநாடிகள்தான்!
அந்த ஓரிரு விநாடிகளுக்குப் பின்-
கிராக்
ஆ ஆ ஆ-
கட்டிடம் சரிகிறது- விலகி ஓடிப் போய் விடவேண்டும்!
ஓடு-ஓடு-!
ஒளி வீச்சுக் கருவி வெடித்துச் சிதறியது-
வாவ்-! க்ருள்ஸின் கண்ட்ரோல் அமைப்பு மொத்தமும் சர்வ நாசம்!
டமாால்!
ஆர்ச்சி நிஜமாகவே தறி கெட்டுப் போனான் அம்மம்மா-பயங்கரம்!
ஆனால்-எல்லா க்ருள்களுமே அப்போது கோபுரத்தில் இல்லையாதலால்-
நம் பலத்தை ஒன்று திரட்டுங்கள்- நம் சக்தி கட்டுப்பாடு கேந்திரம் முற்றிலுமாக நாசமாகிவிட்டது.
நம் பிரபஞ்ச வாகனத்தை நோக்கி ஓடிவாருங்கள்- குண்டுகளை வீசி இந்த தீவை அழிப்போம்!
விடாமல் துரத்து ஆரச்சி-! ஏதோ சதி செய்யும் நோக்கத்தோடு ஓடுகின்றன!
இன்னும் ஆபத்து ஓயவில்லையா?


திறந்த வெளி மைதானத்தில் விண் கலம் ஒன்று தயார் நிலையில் நின்று கொண்டிருந்தது-
ஊஹூம்- நான் நம்ப மாட்டேன்-! தங்களுக்கு பயன் படாது எதையும் அவை அழிக்கவே முற்படக்கூடும்!
அட-. விண்கலம்! நமக்கு ஆபத்து வராது-! அவை தப்பியோட முயற்கின்றன!
வாகனத்தை சட்டென்று கிளப்புங்கள்- நாம் உயரே எரும்பியதும் குண்டு மாரி பொழிந்து தீவை அழிக்க வேண்டும்!
விக்டரின் கணிப்பு சரியே! அவைகளை தடுத்து நிறுத்தத் தவறினால் இந்தத் தீவையே சுடுகாடாக்கி விட்டுப் போய்விடக்கூடும்!
க்ருள்ஸ் அனைத்தும் துரிதமாக விண்கலத்தில் ஏறின-
விண்கலம் மேலெழும் பினால் ஆபத்தாகி விடலாம் - சீக்கிரம் தடுத்து நிறுத்து ஆர்ச்சி!
ம்ம் - சீக்கிரம்!
தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து!


தன் வாடிக்கையான யுக்தியை கையாண்டு பார்த்தது ஆர்ச்சி.
விஷ் விஷ்!
உத்தரவாதமான தந்திரம்!
ஆனால் இம்முறை பலிக்காது!
அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க-
அந்த பாறையை எடுத்து வீசிப்பார் ஆர்ச்சி-!
ஊஹூம் - விண கலத்தை வீழ்த்த இது போதாது!
சட்டென்று விலக்கி ஓட்டி தப்பித்துக் கொண்டு விட்டன!
விர்..ர்..ர்
சே-! இம்முறை ஆர்ச்சியின் பாச்சா பலிக்கவில்லையே!


விண்கலத்தின் உள்ளே-
தானியங்கி விசையை முடுக்கி விட்டேன்!
ராக்கெட்டை அனுப்பும் விசையை இழுத்து விட்டேன்;
இனி-அவர்கள் தப்பவே முடியாது!
இதற்கிடையே-
ஆர்ச்சி- காலம் கடந்து விட்டது- மரத்தை பிடுங்குவதில் பயன் ஏதும் இல்லை- ஓடி வா!
ஊப்ப்-!
ஓடி என்ன பிரயோஜனம்-! தீவில் எந்த இடத்தில் இருந்தாலும் மரணம் சம்பவிக்கப் போகிறது!
அதோவருகிறது- ஏவுகணை!
செத்தோம்-!
கடைசி தருணத்தில் மரத்தை பிடுங்கி எடுத்தது ஆர்ச்சி-
இப்படி சுழற்றி-
ஏவுகணை வருகிறது- பதுங்கிக்கொள்- ஆர்ச்சி!
ஆனால்-
ட்டொக்!
ஏவுகணையை கச்சிதமாகத் தாக்கி திசை திருப்பி விட்டது-
அப்புறமாக என்னை எழுப்பு- அப்போதும் நான் உயிரோடு இருந்தால்!
ஹைய்ய்-யா!



பீதியோடு விழித்தன க்ருள்ஸ்-!
ஐயோ- ஏவுகணை திசை திரும்பி நேராக நம்மை குறி வைத்து வருகிறது!
விண்கலத்தை விலக்கி- ஒவ்வ்வ-!
ஐயோ-!
அடேய் சைத்தானே- சாதித்து விட்டாய்!
நம்பவே முடியாத வெற்றி!
டமார்...
புலுதிப் படலம் அடங்கியதும்-
விண்கலம் ஹோகயா-! க்ருள்ஸின் அட்டகாசத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டோம்!
தூள் கிளப்பி விட்டாய்- பலே-ஆர்ச்சி!
நீ சமர்த்துதான்! ஆனால் இந்த அளவுக்கு சமார்த்தியம் உன்னிடம் இருக்கும் என்று நாங்கள் நினைக்கவேயில்லை!
பதுங்கிக் கிடந்த தீவு வாசிகள் வெளியேறி வந்தனர்-
ஆபத்து நீங்கிவிட்டது- முற்றிலுமாக! அயல் கிரக சைத்தான்களை ஆர்ச்சி கூண்டோடு கைலாசம் அனுப்பி விட்டது!
நாம் அவனுக்கு ஒத்தாசை புரிந்தோம் என்பதை குறிப்பிடு கிறானா-பார்!
சும்மா இரு- அவனுடைய காதில் விழுந்தால், நாம் எவ்வகையில் உதவினோம் என்ற சங்கடமான கேள்வியை கேட்டுத் தொலைக்க போகிறான!



ஏரியினுள்ளிருந்து மேலெழும்பி வந்தன ராட்சஸ கோளங்கள்-
வாருங்கள்-! க்ருள்ஸ் தொல்லை நீங்கிவிட்டது- தீவு இனி உங்களுடையது-பதுங்கிவாழத் தேவையில்லை!
உனக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை- ஆர்ச்சி!
உனக்கும் இங்கே தமாஷ் முடிந்து விட்டதல்லவா-? இனிமேலாவது நாம் ஊர் திரும்புவதில் உனக்கு மறுப்பு இராதுதானே?
எழுந்து வா-! கோட்டையை தேடிப் போவோம்!
ARCHIE
சில நிமிடங்களுக்குப் பின்-
ஹே-என்ன அது?
ஏதோ ஒன்று-விண்கலம் மாதிரி! கோ-வரவர மங்கலாகிறது- ஒரு வகை ஒளி மயக்கமாக இருக்கக் கூடும்!
க்ருள்ஸ் சம்பந்தப்பட்டது இல்லை என்றவரை உறுதியாக நம்பலாம்-அது போதும் நமக்கு!
அடுத்த வினாடி இயந்திரத்தின் உள்ளே-
அடுத்து நாம் எங்கே பயணமாகிறோம் என்பதை எங்களிடம் சொல்லலாமில்லையா?
அவனிடம் போய் கேட்கிறாயே-? என்றைக்காவது இந்தக் கேள்விக்கு அவன் பதில் சொல்லியிருக்கிறானா? பத்திரமான இடத்திற்கு போய்ச் சேர மாட்டோமா என்றிருக்கிறது நமக்கு-! ஆனால் பயலோ எங்கே ஆபத்து இருக்கிறது என்று அலைகிறான்-!ஹூம்ம்-

# ஹாட் - லைன்..

வாசக நண்பர்களே,

நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்கள் அபிமான ஆர்ச்சியின் முழு நீள சாகஸக் கதையை வெளியிட்டிருக்கிறோம். கால இயந்திரத்தில் ஏறி எதிர்காலத்திற்குள் போய் ஆர்ச்சி பண்ணும் அதிரடி சாகஸங்கள் உங்களை மெய்மறக்கச் செய்யப் போகிறது!

அடுத்த மாதம் ஏஜெண்ட் காரிகன் துப்பறியும் **"மர்ம முகமூடி"** வருகிறது!

அதைத் தொடர்ந்து நமது லயனில் புதியதாக ஒரு ஹீரோ அறிமுகம் ஆகப் போகிறார்! அவரை உங்களுக்கு ஏற்கனவே தெரியும்! அவர் வேறு யாருமல்ல- சி. ஐ. டி. **ரிப் கிர்பி** தான்! Professional டிடெக்டிவ்வான இவர், தனது பட்லர் டெஸ்மாண்-டுடன் பல ஆபத்தான கேஸ்களை சந்திப்பது வழக்கம்! இவரது சாகஸங்களை - அழகான சித்திரங்கள் + தெளிவான வசனங்களோடு விரைவில் நமது லயனில் நீங்கள் படிக்கலாம்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!



அன்புடன்,

எஸ். விஜயன்

(ஆசிரியர்)

விரைவில் வருகிறது!

F.B.I. ஏஜெண்ட் காரிகன் துப்பறியும்

# மர்ம முகமூடி!



# ரூ.5000 பரிசுப் போட்டி!

டியர் ரீடர்ஸ்,

சென்ற ஆண்டு ஆரம்பித்த இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பல **புதிய** வாசகர்களுக்காக இந்தப் பக்கம்!

வெளியீடு எண்: 67 அதாவது **"எமனுககு எமன்"** என்ற இதழுடன் சிறியதொரு ஆல்பம் இலவசமாக வழங்கப்பட்டது. அன்று முதல் வெளிவந்த ஒவ்வொரு லயனின் பின்னட்டையிலும் உள்ள நமது கதாநாயகர்களின் படங்களை வெட்டியெடுத்து ஆல்பத்தில் ஒட்ட வேண்டும்.

ஆல்பம் பூர்த்தியானவுடன் அதை எங்களுக்கு அனுபப வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 10 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா ரூ. 500/- பரிசு உண்டு! தவிர நிறைய ஆறுதல் பரிசுகளும் உண்டு!

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள கீழ்க்கண்ட இதழ்கள் தேவை!

1. "எமனுக்கு எமன்" - ரூ. 2-50
2. "திக்குத் தெரியாத தீவில்" - ரூ. 5-00
3. புதையலைத் தேடி... - ரூ. 2-00
4. எமனுடன் ஒரு யுத்தம் - ரூ. 3-00
5. கானகத்தில் ஒரு கைதி - ரூ. 2 50
6. மீண்டும் ஸ்பைடர் - ரூ. 5-00
7. சிலந்தி வலையில் காரிகன் - ரூ. 3-00

இவை அனைத்திலும் சிறிதளவு பிரதிகள் மட்டுமே கைவசம் உள்ளன. பிரதி விலையுடன் தபால் செலவு ரூ. 2/- சேர்த்து மொத்தம் ரூ. 25/- அனுப்பினால் ஆல்பத்துடன் இந்தப் பிரதிகளை அனுப்புகிறோம்.



அ[illegible]

S. [illegible]

ஆசிரியர்.

Regd. No: TN/VR/29,R. N. 49613/87



ரூ.5000 பரிசு!